1992 ஏப்ரல் 23]

கடலிலேயிருந்து அலையைப் பிரிக்கலாம்; கதிரவனிடமிருந்து ஒளியைப் பிரிக்கலாம்; மலரிலேயிருந்து மணத்தைப் பிரிக்கலாம்; ஆனால் மக்கள் மனதிலேயிருந்து புரட்சித் தலைவியை யாராலும் பிரிக்க முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலேதான பெரம்பலூர் தொகுதி சிறப்படைய வேண்டும். வளம் அடைய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அதுமட்டுமல்லாது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செழியன், கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் இரண்டாவது துணைக் கேள்வி கேட்கிறீர்கள்.

திரு. தா. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் தொகுதியிலே அதிகமாகப் படித்தவர்கள் இருக்கின்ற காரணத்தினாலும், மேலும் அவர்கள் படிப்பதற்காக 100 கிலோ மீட்டர் தூரம் சேலத்திற்கும் 60 கிலோ மீட்டர் தூரம் திருச்சிக்கும் செல்ல வேண்டியது இருக்கிறது. எனவே, எப்படியாவது, அடுத்த நிதி ஆண்டில் அல்ல; அதற்கடுத்த நிதியாண்டிலாவது ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை பெரம்பலூர் தொகுதிக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொற் பாதங்களுக்கு ஒரு வேண்டுகோளாக விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 606, திரு. கே. கந்தசாமி. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

606 சேலம் நகரில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடுக்குமாடி காலனி கட்டுதல்.

*4615 திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சேலம் நகரில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் அடுக்குமாடி காலனிகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, சேலம் நகரில் 40-க்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. இந்த குடிசைப் பகுதிகளில் ஆதிதிராவிடர்கள் தான் வசிக்கிறார்கள். இந்தப் பகுதிகளில் சாககடை வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் அவர்கள் பலவித நோய் களுக்கு ஆளாகிறார்கள். எனவே, குடிசைப் பகுதிகள் இருக்கும் பகுதிகளில தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் அடுக்கு மாடிக் கட்டிடங்களை கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள ஆதி திராவிடர்கள் குடியிருப்பு பகுதிகளில் அடுக்கு மாடி காலனி கள் வேண்டுமென்ற கேள்வியை எழுப்பி இருந்தார்கள். தற் போது குடிசைப் பகுதிகளுக்கும் அடுக்குமாடிக் கட்டிடம் வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள். சேலம் நகரைப் பொறுத்தவரை யில், குடிசைப் பகுதிகளில் மட்டுமே குடிசைமாற்று வாரியத்தி னுடைய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. அந்த அடிப்படை யில் சேலம், வெள்ளைக்குட்டை பகுதியில் 208 குடியிருப்புகள் கட்ட திட்டமிட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன. அதற்கான நிதி ஒதுக்கீடு சுமார் 60 இலட்சம் ரூபாய் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்குட்டைப் பகுதியில் அடுக்குமாடிக் கட்டி டம் கட்டப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் நகரில் கடந்த 20 வருடங்களாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதிய காலனிகள் எதுவும் கட்டப்பட வில்லை. ஆதி திராவிடர்கள் வாழும் பகுதிகளில் அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டினால் மற்ற இன மக்களையும் அங்கே குடியமர்த்த முடிகிறது. அந்தக் காலனிகளிலே வசிக்கும் மக்கள் ஜாதி வேறுபாடின்றி பழகுகிறார்கள். ஜாதி வேறுபாடும் ஒழி கிறது. எனவே அதிக அளவில் சேலம் நகரில் குடிசை மாற்று வாரியக் காலனிகள் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணிகள் குடிசைப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன. அந்த அடிப்படையில் எங்கெங்கு எல்லாம் அந்தப் பணிகள் செயல் படுத்தப்படுகின்றனவோ அங்கெல்லாம் இருக்கின்ற ஆதி திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் அதன் மூலம் பயன் பெறலாம். அந்த அடிப்படையில் நடப்பு நிதி ஆண்டுக்கு நிதி ஆதாரத்தைப்

பொறுத்து, சேலம் நகரத்தில் இருக்கிற குடிசைப் பகுதிகளை மாற்றியமைக்கின்ற வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 607, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

நலிந்த நாடக மற்றும் சினிமாக் கலைஞர்களுக்கு வீட்டுவசதி.

*5770 டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நலிந்த நாடக மற்றும் சினிமாக் கலைஞர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் வீட்டுவசதி செய்துகொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு ருதி. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியம் மிக்க தமிழ் நாட்டினுடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், பெருமையையும் உலக மக்களுக்கு விளம்பரப்படுத்திக் கொள்கிறவர்கள் நாடக நடிகர்களும், சினிமாக் கலைஞர்களும், பத்திரிகை நிருபர்களும். ஏனோ விதியின் விளையாட்டோ என்னவோ என்று ஒன்றும் புரியவில்லை, இந்தத் திறமை மிக்க சினிமாக் கலைஞர்களும், நாடக நடிகர்களும், தன்னுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவதற்குக் கூட வழியில்லாமல் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்பட்டு, குடியிருக்கக் கூட வீடு இல்லாமல் வாழ்கிறார்கள். ஆனால் ஒருசில கலைஞர்கள், வளர்ந்து வந்தவர்கள் அவர்களுக்கெல்லாம் ரசிக மன்றங்கள் இருக்கின்ற இந்த நேரத்தில் திறமை மிக்க இந்தக் கலைஞர்களுக்கு வீடுகளை வாடகைக்குக் கூட கொடுப்பதற்காகத் தமிழகத்தினுடைய மக்கள் முன் வருவதில்லை. இந்தக் கொடுமையைப் போக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கலைஞர்கள் மேல் அதிக அக்கறை வைத்திருக்கின்ற இந்த நேரத்தில், நம்முடைய தமிழக முதல்வரவர்களுடைய